(22) How are these two classes respectively designated by St. Paul? And will they come into judgment with the world? Page 145 ¶ 3
22. இந்த இரண்டு வகுப்பினரும் குறிப்பாக பரிசுத்தவானாகிய பவுலினால் எவ்வாறு குறிப்பிடப்படுகின்றனர்? மேலும், அவர்கள் உலகத்தோடு கூடிய நியாயத்தீர்ப்புக்குள் வருவார்களா? **A P. 176 ¶ 1**

(23) What was necessary before the members of these two classes could be placed on trial? Page 146 ¶ 1
23. இவ்விரண்டு வகுப்பாருடைய அங்கங்கள் பரீட்சைக்கு நிறுத்தப்படுவதற்கு முன்பு அவசியப்படுவது என்ன? **A P. 176 ¶ 2**

(24) Contrast the judgments of these special classes with the world's trial. Page 146 ¶ 2
24. இந்த விசேஷித்த வகுப்பாருடைய நியாயத்தீர்ப்போடு உலகத்தின் பரீட்சையை வேறுபடுத்திக் காட்டவும். **A P. 177 ¶ 1**

(25) How and by whom have the world and the nominal church been deceived respecting the true character of the future Judgment Day? Page 146 ¶ 3
25. வரவிருக்கிற நியாயத்தீர்ப்பு நாளின் உண்மை குணாதிசயம்குறித்து உலகமும், பெயர் சபையும் எப்படி யாரால் வஞ்சிக்கப்பட்டிருக்கின்றனர்? **A P. 177 ¶ 2**

(26) How did the prophets and the apostles regard the promised Day of Judgment? Page 147 ¶ 1, 2
26. தீர்க்கதரிசிகளும், அப்போஸ்தலரும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட நியாயத்தீர்ப்பின் நாள் குறித்து கருதினது என்ன? **A P. 178 ¶ 1, 2, 3**

(27) Explain how John 5:28, 29 has been mistranslated and misapplied. Page 147 ¶ 3
27. யோவான் 5:28, 29-ஆம் வசனமானது எவ்வாறு தவறாக மொழிபெயர்க்கப்பட்டு, தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை விளக்கிக் கூறவும். **A P. 178 ¶ 4**

---

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் I மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 9

### *''ஈடுபலியும், திரும்பக்கொடுத்தலும்''*

(1) What is the logical sequence of the "Ransom for all"? Page 149 ¶ 1
1. "அனைவருக்குமான ஈடுபலிக்குப்" பின்னர் நியாயமாய்த் தொடர்ந்து வரவேண்டியது என்ன? **A P. 181 ¶ 1**

(2) What statement is made by St. Paul in Romans concerning the object of the Lord's death and resurrection? And if Jesus gave Himself "a ransom for all," is it reasonable to believe that only a few will ever receive any benefit from His sacrifice? Page 149 ¶ 2
2. ஆண்டவருடைய மரணம் மற்றும் உயிர்த்தெழுதலின் **நோக்கம்** குறித்து ரோமருக்கு எழுதின நிருபத்தில் அப்போஸ்தலர் பவுல் தெரிவித்துள்ளது என்ன? மேலும், "**எல்லாரையும்** மீட்கும்பொருளாக" இயேசு தம்மையே கொடுத்தார் எனும்போது, அவருடைய பலியின் மூலமாக ஒரு **சிலரே** எந்த ஒரு பலனையும் பெற்றுக்கொள்வார்கள் என்று நம்புவது நியாயமானதாகக் காணப்படுகிறதா? **A P. 181 ¶ 2**

(3) What is the Scriptural distinction between "the dead" and "the living"? Page 150, footnote.
3. **"மரித்தோருக்கும்" "ஜீவனுள்ளோருக்கும்"** இடையே காணப்படும் வேதவாக்கியத்தின் அடிப்படையிலான வித்தியாசம் என்ன? **A P. 182 [அடிக்குறிப்பு]**

(4) Does the Ransom assure everlasting life to any man? If not, what does it guarantee? And how is the result of the first trial in Eden to be turned into a blessing of experience to all the loyal-hearted? Page 150 ¶ 1
4. ஈடுபலியானது எந்த மனுஷனுக்காகிலும் நித்திய ஜீவனை உறுதியளிக்கிறதா? இல்லையெனில், அது கொடுக்கும் **உத்தரவாதம்** என்ன? மேலும் ஏதேனில் வைக்கப்பட்ட முதல் பரீட்சைக்கான விளைவானது உத்தம இருதயத்தோடு காணப்படும் அனைவருக்கும் ஆசீர்வாதத்தை அருளும் அனுபவத்திற்குள்ளாக எவ்வாறு மாற்றப்பட உள்ளது? **A P. 183 ¶ 1**

(5) Will the world's second trial take place under exactly the same circumstances as the first trial? Will the terms or conditions of the world's trial be the same as those of the Adamic trial? What will constitute the great advantage of the second trial? Page 151 ¶ 1
5. உலகத்தின் இரண்டாம் பரீட்சையானது, முதலாம் பரீட்சையைப் போன்றே அதே சூழ்நிலையின் கீழ் இடம்பெறுமா? உலகத்தின் பரீட்சையானது, ஆதாமின் பரீட்சையைப் போன்று அதே நிபந்தனைக்குட்பட்டதாக இருக்குமா? இரண்டம் பரீட்சையின் விஷயத்தில் காணப்படும் மாபெரும் அனுகூலம் என்ன? **A P. 184 ¶ 1**

(6) Does the Ransom excuse sin or count sinners as saints? or how does it operate? Page 152 ¶ 1
6. ஈடுபலியானது பாவத்தை மன்னிக்கின்றதா அல்லது பாவிகளை பரிசுத்தவான்கள் என்று எண்ணுகின்றதா? அல்லது அது எவ்வாறு இயங்குகின்றது? **A P. 185 ¶ 1**

(7) Do all who live in civilized lands now enjoy a full opportunity or trial for life? Page 152 ¶ 2
7. நாகரீகமான தேசங்களில் வாழக்கூடியவர்கள் தற்போது ஜீவனுக்கான **முழு** வாய்ப்பையோ அல்லது பரீட்சையையோ அடைந்திருக்கிறார்களா? **A P. 185 ¶ 2**

(8) Who are the few that now receive any benefit from the Ransom? Explain the conditions and circumstances of their trial. Page 152 ¶ 3
8. ஈடுபலியிலிருந்து கிடைக்கப்பெறும் பலன்களை தற்போது அனுபவித்து வரும் சிலர் யார்? அவர்களுடைய பரீட்சைக்கான நிபந்தனைகள் மற்றும் சூழ்நிலைகள் குறித்து விளக்கிக்கூறவும். **A P. 185 ¶ 3**

(9) What are the two great differences between the experiences of the world and the church during their respective trials? Page 153 ¶ 1
9. உலகத்திற்கான பரீட்சை மற்றும் சபைக்கான பரீட்சை தொடர்புடைய அனுபவங்களின் விஷயத்திலுள்ள இரண்டு மாபெரும் வித்தியாசங்கள் என்னென்ன? **A P. 186 ¶ 1**

(10) Is it the pain and suffering in dying, or death --extinction of life--that constitutes the penalty of sin? Was there any intimation of a release at the time the penalty was pronounced? Page 153 ¶ 2
10. **மரிக்கையில்** உள்ள வலியும் வேதனையும் பாவத்தின் தண்டனையாக இருக்கின்றதா அல்லது மரணம் பாவத்தின் தண்டனையாக இருக்கின்றதா? தண்டனை தீர்ப்பு அறிவிக்கப்பட்ட சமயத்தில் விடுதலை குறித்து ஏதேனும் தெரிவிக்கப்பட்டதா? **A P. 187 ¶ 1**

(11) What was suggested in the promise that the "Seed of the woman should bruise the serpent's head"? Page 154 ¶ 1
11. "ஸ்திரீயின் வித்து சர்ப்பத்தின் தலையை நசுக்கும்" என்று கொடுக்கப்பட்டிருக்கும் வாக்குத்தத்தத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கும் கருத்து என்ன? **A P. 188 ¶ 1**

(12) Did God's dealings with Abraham indicate that He had changed His mind, and would excuse sin in man? How did Jehovah show through Abraham's experiences the necessity for Christ's death? Page 155 ¶ 1
12. ஆபிரகாமுடன் தேவன் நடந்துகொண்ட விஷயமானது, தேவன் **தமது மனதை மாற்றிக்கொண்டார்** என்பதையோ மற்றும் மனுஷனில் காணப்படும் பாவத்தை மன்னிப்பார் என்பதையோ சுட்டிக்காட்டுகிறதா? கிறிஸ்துவின் மரணம் அவசியமானது என்பதை தேவன் ஆபிரகாமினுடைய அனுபவங்களின் மூலமாக எவ்வாறு காண்பிக்கிறார்? **A P. 189 ¶ 1**

(13) If it is clear that Jesus died for Adam, how were Adam's children to receive any benefit from this transaction? Page 155 ¶ 2
13. இயேசு ஆதாமுக்காக மரித்தது தெளிவாக இருக்கிறதென்றால், ஆதாமின் பிள்ளைகள் இந்த நடவடிக்கையிலிருந்து வரக்கூடிய எந்தப் பலனையும் எவ்வாறு பெறக்கூடியவர்களாக இருக்கப்போகின்றனர்? **A P. 189 ¶ 2**

(14) What is the philosophy of the Ransom as shown in Romans 5:18, 19? If the giving of the Ransom alone made the sinner righteous, how would verse 19 have been written? Page 156.
14. ரோமர் 5:18,19-இல் காண்பிக்கப்பட்டுள்ளபடி, மீட்கும்பொருளின் தத்துவம் என்ன? மீட்கும் பொருள் கொடுப்பது மட்டுமே பாவியை நீதிமானாக்கிற்று என்றால் வசனம் 19 எவ்வாறு எழுதப்பட்டிருக்க வேண்டும்? **A P. 190 ¶ 1; A P. 191 ¶ 1**

(15) How does the Justice of God, which condemned the sinner, stand pledged to release the purchased race? Page 157 ¶ 1
15. பாவிக்கு மரணத்தீர்ப்பு கொடுத்த தேவனுடைய நீதியானது, விலைக்கிரயத்தினால் மீட்கப்பட்ட சந்ததியை விடுவிப்பதற்கு எவ்வாறு கட்டுப்பட்டுள்ளது? **A P. 191 ¶ 2**

(16) What is the strongest possible argument for the restitution of all the willing of mankind, in considering the Ransom? Page 157 ¶ 2
16. ஈடுபலியைப் பொறுத்தவரையில், விருப்பமுள்ள மனுக்குலம் அனைவருக்குமான திரும்பக்கொடுத்தலின் ஆசீர்வாதங்களுக்கான மிக உறுதியான கருத்தாக இருப்பது என்ன? **A P. 192 ¶ 1**

(17) Does the foregoing view deny the necessity for repentance and reformation of character in order to gain salvation? Page 158 ¶ 1
17. தற்போது குறிப்பிட்ட பார்வையானது, இரட்சிக்கப்படும்படிக்கு மனந்திரும்புதல் மற்றும் குணநலன்களின் சீர்பொருந்துதலுக்கான அவசியத்தை மறுக்கின்றதா? **A P. 192 ¶ 2**

(18) In view of the Ransom, what is the strongest argument against the theory that eternal torment is the penalty for sin? Page 158 ¶ 2
18. நித்தியமான சித்திரவதையே பாவத்திற்கான தண்டனை என்ற கூற்றுக்கு எதிராக ஈடுபலியை முன்னிட்டு மிக உறுதியான கருத்தாகக் காணப்படுவது என்ன? **A P. 193 ¶ 1**

(19) What position are some of the advocates of eternal torment forced to take when confronted by the Scriptures on the subject of the Ransom? Page 159 ¶ 1
19. ஈடுபலி குறித்து ஆய்வு பொருளின் மீதான வேதவாக்கியங்களை எதிர்கொண்டபோது, நித்திய சித்திரவதை ஆதரித்தவர்களில் சிலர் எப்படிப்பட்ட நிலைப்பாட்டினை எடுப்பதற்குரிய கட்டாயத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளார்கள்? **A P. 194 ¶ 1**

(20) What is the fear of some with respect to the doctrine of Restitution? Page 159 ¶ 2
20. திரும்பக்கொடுத்தலின் உபதேசம் பொறுத்தவரையில் சிலருக்கு ஏற்பட்டிருக்கும் பயம் என்ன? **A P. 195 ¶ 1**

(21) Briefly estimate the number of the human race, from creation to the present time. Page 160 ¶ 1, 2
21. சிருஷ்டிப்பு முதல் தற்போதைய காலம் வரையுள்ள மனுக்குல சந்ததியினரின் எண்ணிக்கை குறித்து சுருக்கமாக கணக்கிட்டுக் காட்டவும். **A P. 195 ¶ 2, 3**

(22) Where shall we find room for this vast multitude? How many would the State of Texas accommodate as a cemetery? Page 160 ¶ 3
22. இந்த மாபெரும் ஜனக்கூட்டத்திற்கு போதுமான இடத்தை நாம் எங்கு கண்டுபிடிக்கலாம்? டெக்டாஸ் மாநிலத்தை ஒரு கல்லறையாக கணக்கிட்டால், எவ்வளவு பிரேதங்களுக்கு இடங்கொள்ளும்? **A P. 196 ¶ 1**

(23) Where could this number find standing room? Page 161 ¶ 1
23. இந்த எண்ணிக்கையானோருக்கு இடம் எங்கே? **A P. 196 ¶ 2**

(24) What say the prophets concerning the provision God will make for the needs of the human race? Page 161 ¶ 2
24. மனுக்குல சந்ததியினரின் தேவைக்கேற்ப தேவன் செய்யவிருக்கும் ஏற்பாடு குறித்து தீர்க்கதரிசிகள் சொல்லியிருப்பவை என்ன? **A P. 197 ¶ 1**

(25) How would an Evolutionist regard Restitution? Page 161 ¶ 3
25. பரிணாமக் கொள்கையை ஆதரிக்கும் ஒருவர் திரும்பக்கொடுத்தலை எவ்வாறு கருதுவார்? **A P. 197 ¶ 2**

(26) What do some professed ministers of the Gospel teach respecting the fall of man? Page 162 ¶ 1
26. மனிதனுடைய வீழ்ச்சி குறித்து சுவிசேஷத்தின் ஊழியர்கள் என தங்களை அறிக்கைப் பண்ணிக்கொள்ளும் சிலர் போதிப்பது என்ன? **A P. 197 ¶ 3**

(27) If we thus make of none effect the Word of God as respects the fall of man, how can we accept the testimony of the apostles and prophets upon other subjects? Page 162 ¶ 2
27. மனிதனுடைய வீழ்ச்சி குறித்து தேவனுடைய வார்த்தைகள் பயனற்றதாக கருதப்படுமாகில், மற்ற ஆய்வுப்பொருட்கள் மீதான அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளின் சாட்சியத்தை நாம் எவ்வாறு ஏற்றுக்கொள்வது? **A P. 198 ¶ 1**

(28) What is the popular theory regarding Evolution and the Brain-age, so called? Page 162 ¶ 3
28. பரிணாமம் மற்றும் அறிவின் யுகம் என்று அழைக்கப்படுவது சம்பந்தமான பிரபலமான கொள்கை என்ன? **A P. 198 ¶ 2**

(29) What is the position of a true scientist? And why are the deductions of scientific research not infallible? Page 163 ¶ 1
29. ஓர் உண்மையான விஞ்ஞானியின் நிலை என்ன? மேலும், விஞ்ஞான ஆராய்ச்சிகளின் கணிப்புகள்/முடிவுகள் ஏன் தவறாய் இருப்பதற்கும் வாய்ப்புள்ளது? **A P. 199 ¶ 1**

(30) What should be our attitude toward scientific investigation, and how should the Book of Nature, when rightly understood, compare with the Book of Divine Revelation? Page 163 ¶ 2
30. விஞ்ஞான கண்டுபிடிப்பு நோக்கின நம்முடைய மனநிலை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும்? மேலும், இயற்கை எனும் புத்தகம், தெய்வீக வெளிப்பாடாகிய புத்தகத்தோடு ஒப்பிட்டு எவ்வாறு சரியாக புரிந்துக்கொள்ளப்பட வேண்டும்? **A P. 199 ¶ 2**

(31) In regard to the theory of Evolution and the Brain-age, what are the facts with respect to brain capacity in past ages, as compared with that of the present day? Page 163 ¶ 3
31. பரிணாமக்கொள்கை மற்றும் அறிவின் யுகத்தைப் பொறுத்தவரையில், தற்காலத்தில் காணப்படும் மூளைத்திறனோடு ஒப்பிடுகையில் முற்தைய காலத்தின் மூளைத்திறன் குறித்த கருத்துக்கள் என்னென்ன? **A P. 200 ¶ 1**

(32) How do modern logic, poetry and laws compare with the Old Testament writings? Page 164 ¶ 1
32. நவீன தர்க்கங்கள், கவிதை மற்றும் சட்டங்கள் போன்றவை பழைய ஏற்பாட்டு எழுத்துக்களோடு எவ்வாறு ஒப்பிடப்படுகிறது? **A P. 201 ¶ 1**

(33) What shall we say of the arts and sciences among the Ancients? Page 165 ¶ 1
33. பழங்காலத்தின் கலை மற்றும் விஞ்ஞானம் குறித்து நாம் என்ன சொல்லலாம்? **A P. 201 ¶ 2**

(34) What scientific facts are demonstrated in the "Great Pyramid of Egypt," erected about Abraham's time? Page 165 ¶ 2
34. ஆபிரகாமினுடைய காலத்தில் கட்டப்பட்ட "எகிப்தின் மகா பிரமிடில்" எப்படிப்பட்ட விஞ்ஞான காரியங்கள் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது? **A P. 201 ¶ 3**

(35) If, then, the mental capacity of today is probably less than that of by-gone ages, how shall we account for modern inventions and the general increase of knowledge? Page 165 ¶ 3
35. தற்காலத்து மனிதனுடைய அறிவுத்திறன், முற்காலங்களைக் காட்டிலும் குறைவாகவே காணப்பட்டிருக்க, நவீன கண்டுபிடிப்புகளையும், பொதுவான அறிவுப் பெருக்கத்தையும் நாம் எவ்வாறு எடுத்துக்கொள்வது? **A P. 202 ¶ 1**

(36) In an investigation of causes for present-day inventions, etc., do we find that all men are inventors, or do the majority of inventors possess exceptional brain power? What is the history of some of the greatest discoveries and inventions? Page 166 ¶ 1
36. தற்கால கண்டுபிடிப்புகளுக்கான காரணத்தை விசாரணை செய்ததில், மனிதர் அனைவருமே கண்டுபிடிப்பாளர்கள் அல்லது கண்டுபிடிப்பாளர்களில் பெரும்பான்மையானோர் அசாதாரணமான மூளைத்திறனை உடையவர்கள் என்று நாம் கண்டுகொள்கிறோமா? மாபெரும் கண்டுபிடிப்புகள் சிலவற்றின் சரித்திரம் என்ன? **A P. 203 ¶ 1**

(37) How can modern inventions be accounted for from a human standpoint? Does education increase brain capacity, or what is its effect? Page 166 ¶ 2
37. மனித நிலைப்பாட்டிலிருந்து நவீன கண்டுபிடிப்புகள் எவ்வாறு எடுத்துக்கொள்ளப்படலாம்? கல்வி மூளைத்திறனை அதிகரிக்கிறதா, அல்லது அதின் விளைவு என்ன? **A P. 203 ¶ 2**

(38) What do the Scriptures reveal upon this subject of the increase of knowledge, etc? Page 167 ¶ 1
38. அறிவு பெருத்துப்போகும் என்ற இந்த ஆய்வுப்பொருள் குறித்து வேதவாக்கியங்கள் வெளிப்படுத்துவது என்ன? **A P. 204** ¶ **1**

(39) Why did not God so arrange that present blessings of inventions, etc., should have come earlier in the history of the race? Page 168 ¶ 1
39. தற்கால கண்டுபிடிப்புகளின் ஆசீர்வாதங்கள், மனித சந்ததியினரின் வரலாற்றில் முன்கூட்டியே வந்திருக்கும்படி தேவன் ஏற்பாடு செய்யாதிருந்தது ஏன்? **A P. 205** ¶ **1**

(40) Explain how God's permission of present advantages will serve to teach the world that blessings bestowed upon those whose hearts are evil would lead to greater evils; first, as respects monopolies. (Page 168 ¶ 2) Secondly, with respect to the evils of idleness. Page 169.
40. தீமையான இருதயம் உடையவர்கள் மீது ஆசீர்வாதங்கள் அருளுவது என்பது முதலாவதாக ஏகபோக தனி உரிமைகள் தொடர்புடையதும், இரண்டாவதாக சோம்பேறித்தனம் தொடர்புடையதுமான மாபெரும் தீமைகளுக்கு வழிநடத்தும் என்பதை தற்காலத்தின் அனுகூலங்கள் தொடர்புடைய தேவனுடைய அனுமதியானது எவ்வாறு உலகத்திற்கு கற்றுக்கொடுக்கும்? **A P. 206** ¶ **1; A P. 207** ¶ **1**

(41) With what great event does the Prophet Daniel connect this increase of knowledge? Page 170 ¶ 1
41. தானியேல் தீர்க்கதரிசி அறிவு பெருத்துப்போகும் இக்காரியத்தை எந்த மாபெரும் சம்பவத்தோடு இணைக்கிறார்? **A P. 208** ¶ **1**

(42) What characteristics of depraved human nature will continue to control both rich and poor until the climax is reached? Page 170 ¶ 2
42. உச்சபட்ச நிலையை அடையும்வரை ஐசுவரியவான்களையும், ஏழைகளையும் விழுந்துபோன மனித சுபாவத்தின் எக்குணாதிசயமானது தொடர்ந்து கட்டுப்பாட்டுக்குள் வைக்கும்? **A P. 208** ¶ **2**

(43) When and how will the great Time of Trouble end? Page 171 ¶ 1
43. மகா உபத்திரவ காலம் எப்படி எப்பொழுது முடிவுக்கு வரும்? **A P. 209** ¶ **1**

(44) What is the difference between the position of the world and that of the Lord'speople in the "day of His preparation"? Page 171 ¶ 2
44. அவருடைய "ஆயத்தம்பண்ணும் நாளில்" உலகத்தின் நிலைக்கும் கர்த்தருடைய ஜனங்களின் நிலைக்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? **A P. 209** ¶ **2**

(45) Give a resume of the foregoing arguments, showing the direct antagonism between the Scriptures and the Evolution theory. Page 171 ¶ 3
45. வேதவாக்கியங்கள் மற்றும் பரிணாமக் கொள்கைக்கு இடையே காணப்படும் நேரடியான எதிர்ப்பைக் காண்பிக்கக்கூடிய தற்போது குறிப்பிடப்பட்ட வாதத்தின் மீதான தொகுப்பு ஒன்றைக் கொடுக்கவும். **A P. 210** ¶ **1**

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் I மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 10

### *‘‘மனித சுபாவத்திற்கும், ஆவிக்குரிய சுபாவத்திற்கும் இடையே உள்ள வித்தியாசமும் தனித்தன்மைகளும்’’*

(1) What is the common misapprehension respecting salvation and the spirit nature? Page 173 ¶ 1
1. இரட்சிப்பு குறித்தும் ஆவிக்குரிய சுபாவம் குறித்தும் பொதுவாகக் காணப்படும் தவறான கருத்து என்ன? **A P. 213 ¶ 1**

(2) Is restitution for the world of mankind any less complete a salvation from sin and death than the special salvation of the church? Page 173 ¶ 2
2. உலக மனுக்குலத்திற்கான திரும்பக்கொடுத்தலானது, சபையினுடைய விசேஷித்த இரட்சிப்பைப்பார்க்கிலும், பாவம் மற்றும் மரணத்திலிருந்து, முழுமையான இரட்சிப்பாக இல்லாமல் இருக்குமா? **A P. 213 ¶ 2**

(3) What misunderstandings have led to this erroneous thought that none will be saved except to the spirit nature? And what is the common view with respect to the presence of a perfect man on the earth? Page 174 ¶ 1
3. ஆவிக்குரிய சுபாவத்திற்கு போகப்போகிறவர்கள் தவிர வேறொருவரும் இரட்சிக்கப்பட மாட்டார்கள் என்ற இந்த தவறான கருத்துக்களுக்கு வழிநடத்தி இருக்கும் தவறான புரிந்துகொள்ளுதல்கள் என்ன? மேலும், இப்பூமியில் ஒரு **பரிபூரண** மனுஷன் இருந்தது தொடர்பாகக் காணப்படும் பொதுவான கண்ணோட்டம் என்ன? **A P. 214 ¶ 1**

(4) What say the Scriptures as to the number of perfect men that have lived on this earth? Page 174 ¶ 2
4. இப்பூமியில் வாழ்ந்துக்கொண்டிருந்த பரிபூரண மனுஷரின் எண்ணிக்கைக்குறித்து வேத வாக்கியங்கள் கூறுவது என்ன? **A P. 214 ¶ 2**

(5) In what respect was man created after the likeness of Jehovah? Did God finish His creation of man, and what was His statement concerning man's perfection? Page 174 ¶ 3
5. எவ்வகையில் மனிதனானவன், தேவனுடைய ரூபத்தின்படி சிருஷ்டிக்கப்பட்டவனாக இருந்தான்? தேவன், மனிதனின் சிருஷ்டிப்பை **முடித்துவிட்டாரா**? மேலும், மனிதனுடைய பூரணம் தொடர்பாக அவர் குறிப்பிட்டது என்ன? **A P. 215 ¶ 1**

(6) How is man's original perfection described in Psalms 8:5-8? And what is the significance of "a little lower than the angels"? (Heb. 2:7.) Page 174 ¶ 4
6. மனிதனுடைய ஆதி பூரணம் குறித்து சங்கீதம் 8:5-8 வரையிலான வசனங்கள் எவ்வாறு விளக்கிக் கூறப்பட்டுள்ளது? மேலும், "தூதர்களிலும் சற்றுச் சிறியவனாக்கினீர்" என்பதன் உட்பொருள் என்ன? (எபிரெயர் 2:7) **A P. 215 ¶ 2**

(7) What is the prophetic intimation in Psalms 8:5-8 respecting God's purpose for mankind, and how does the Apostle Paul in Heb. 2:7 corroborate this statement? Page 175 ¶ 1
7. மனுக்குலத்திற்கான தேவனுடைய திட்டம் குறித்து சங்கீதம் 8:5-8 வரையிலான வசனங்களில் தீர்க்கதரிசனமாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது என்ன? மேலும், அப்போஸ்தலர் பவுல் எபிரெயர் 2:7-ஆம் வசனத்தில் இவ்வாக்கியத்தை எவ்வாறு உறுதிப்படுத்துகிறார்? **A P. 216 ¶ 1**

(8) Does a little lower in degree signify that a creature is less perfect? Page 175 ¶ 2 to top of page 176.
8. ஸ்தானத்தில் சற்றுச் சிறியவர் எனும்போது, அந்த சிருஷ்டி **பரிபூரணத்தில் குறைவானது** என்று அர்த்தப்படுமா? **A P. 216** ¶ **2** மற்றும் அட்டவணை.

(9) Explain the table illustrating the different grades of nature, animate and inanimate. Page 176 ¶ 1
9. உயிருள்ள மற்றும் உயிரற்ற பல்வேறு சுபாவ நிலைகள் குறித்து எடுத்துக்காட்டுகள் வாயிலாக வலியுறுத்தக்கூடிய அட்டவணையை விளக்கிக் காட்டவும். **A P. 217** ¶ **1**

(10) While the different classes mentioned are separate and distinct, what comparison may be instituted between them? Page 176 ¶ 2
10. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு வகைகள் தனித்தன்மை வாய்ந்ததும், வேறு பட்டதாகவும் இருக்க, அவைகளுக்கு இடையே என்ன ஒப்புமைகள் பார்க்கப்படலாம்? **A P. 218** ¶ **1**

(11) Contrast man's present degraded condition with that of the perfect man, created in the image of God. What did man lose? and what, therefore, did Jesus come to "seek and to save"? Page 177 ¶ 1
11. மனிதனுடைய தற்போதைய சீர்கெட்ட நிலையை, தேவனுடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்ட பரிபூரண மனிதனின் நிலையோடு வேறுபடுத்திக் காட்டவும். மனிதன் இழந்தது என்ன? மேலும், இயேசு எதைத் **"தேடவும், இரட்சிக்கவும்"** வந்தார்? **A P. 218** ¶ **2**

(12) What further proof have we that a perfect man is not a spirit being? Page 177 ¶ 2
12. ஒரு பரிபூரண மனிதன் என்பவன், ஓர் ஆவிக்குரிய ஜீவி அல்ல என்பதற்கு மேலும் நாம் பெற்றிருக்கும் நிரூபணம் என்ன? **A P. 219** ¶ **1**

(13) Is angelic nature the only order of spirit being? And what do Hebrews 2:16 and Philippians 2: 7-9 teach as regards the divine, angelic and human natures respectively? Page 178 ¶ 1, 2
13. தூதர் சுபாவமே, ஆவிக்குரிய ஜீவியின் ஒரே வகை நிலையாக உள்ளதா? மேலும், எபி 2:16 மற்றும் பிலி 2:7-9 வரையிலான வசனங்கள் தெய்வீக சுபாவம், தூதர் சுபாவம் மற்றும் மனித சுபாவம் குறித்து போதிப்பவை என்ன? **A P. 219** ¶ **2; A P. 220** ¶ **1**

(14) Why was it necessary for Jesus to have been a perfect Man from the standpoint of the perfect Law of God and the Ransom? Page 178 ¶ 3
14. தேவனுடைய பரிபூரண பிரமாணம் மற்றும் ஈடுபலியின் கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும்போது இயேசு ஒரு பரிபூரண மனிதராக இருக்க வேண்டியிருந்ததன் **அவசியம்** என்ன? **A P. 220** ¶ **1**

(15) If Jesus in the flesh was a perfect Man, what conclusions do we draw concerning the relation of a perfect man to the angelic and the human natures? Page 179 ¶ 1
15. மாம்சத்தில் இருந்த இயேசு ஒரு பரிபூரண மனிதராக இருந்தாரானால், ஒரு பரிபூரண மனிஷனுக்கு தூதர் சுபாவத்துடனும், மனுஷீக சுபாவத்துடனும் இருக்கும் தொடர்பு விஷயத்தில் நாம் என்ன முடிவுக்கு **வரலாம்**? **A P. 221** ¶ **1**

(16) Was Jesus a combination of two natures? Describe in detail the different changes of nature experienced by our Lord from His creation to His glorification. Page 179 ¶ 2; page 180 ¶ 1
16. இயேசு இரண்டு சுபாவங்களின் கலப்பாக இருந்தாரா? நம்முடைய கர்த்தர் தம்முடைய சிருஷ்டிப்பு முதல் அவருடைய மகிமையாக்கப்படுதல்வரை அனுபவித்த பல்வேறு சுபாவ மாற்றங்களை விரிவாக விளக்கிக் கூறவும். **A P. 221** ¶ **2; A P. 222** ¶ **1**

(17) What do we see manifested in Jesus' grand example of perfect humanity? Page 180 ¶ 2
17. பரிபூரண மனுஷீகத்தின் பிரம்மாண்டமான உதாரணமாக இயேசுவில் வெளிப்பட்டதாக நாம் காணக்கூடியவை என்ன? **A P. 222** ¶ **2**

(18) What will doubtless be man's future experience in the use of his perfect faculties? And will the exercise of these powers result in any change of nature? Page 180 ¶ 3
18. மனிதன் தன்னுடைய பரிபூரண மனத்திறனை பயன்படுத்துவதில், சந்தேகத்திற்கிடமின்றி அவனுடைய எதிர்கால அனுபவம் என்னவாக இருக்கும்? மேலும், இந்த வல்லமைகளை பிரயோகிப்பது ஏதாவது சுபாவ மாற்றத்தை ஏற்படுத்துமா? **A P. 222 ¶ 3**

(19) Of what class is Jesus an illustration since His resurrection? Page 180 ¶ 4
19. இயேசு தம்முடைய உயிர்த்தெழுதலிலிருந்து எந்த வகுப்பாருக்கு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கிறார்? **A P. 223 ¶ 1**

(20) Does God's Plan end with the completion of this "elect" company? Page 180 ¶ 5
20. "தெரிந்துகொள்ளப்பட்ட" கூட்டத்தாரின் நிறைவோடு தேவனுடைய திட்டம் முடிவடையுமா? **A P. 223 ¶ 2**

(21) What do the Apostles Paul and John say about spirit beings, their powers and the laws by which they are governed? Page 181 ¶ 1
21. ஆவிக்குரிய ஜீவிகள் குறித்தும், அவர்களுடைய வல்லமைகள் மற்றும் அவர்கள் ஆளப்பட்டு வரும் சட்டங்கள் குறித்தும் அப்போஸ்தலனாகிய பவுல் மற்றும் யோவான் கூறுவது என்ன? **A P. 223 ¶ 3**

(22) Is there any record of a being, except the Son of God, ever having been changed from one nature to another? Page 182 ¶ 1
22. தேவனுடைய குமாரனைத் தவிர வேறெந்த ஜீவியாவது, ஒரு சுபாவத்திலிருந்து மற்றொரு சுபாவத்திற்கு எப்பொழுதாவது மாறியிருப்பதாக பதிவு ஏதாகிலும் காணப்படுகிறதா? **A P. 224 ¶ 1**

(23) What general information regarding the spirit nature is drawn from the facts recorded of our Lord after His resurrection? First, as to the visibility of spirit beings? Page 182 ¶ 2
23. நமது ஆண்டவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின் நடந்தவைகள் குறித்து பதிவு செய்யப்பட்டுள்ள காரியங்களிலிருந்து, ஆவிக்குரிய சுபாவம் தொடர்பாக எடுக்கப்பட்ட பொதுவான தகவல் என்ன? அதாவது, முதலாவதாக, ஆவிக்குரிய ஜீவிகள் கண்களுக்குப் புலப்படுமா என்பது பற்றின பொதுவான தகவல் என்ன? **A P. 225 ¶ 1**

(24) Secondly, regarding some of the powers of spirit beings? Page 183 ¶ 1
24. இரண்டாவதாக ஆவிக்குரிய ஜீவிகளுடைய வல்லமைகள் சிலவற்றைப் பற்றின பொதுவான தகவல் என்ன? **A P. 226 ¶ 1**

(25) Thirdly, as respects the normal condition and appearance of angels? Page 183 ¶ 2
25. மூன்றாவதாக, தூதர்களின் **இயல்பான** நிலை மற்றும் தோற்றம் பற்றின பொதுவான தகவல் என்ன? **A P. 226 ¶ 2**

(26) What did the manifestation of the risen Lord to Saul on his way to Damascus reveal concerning spirit beings? Page 183 ¶ 3
26. தமஸ்குவுக்குச் செல்லும் வழியில் சவுலுக்குத் தம்மை வெளிப்படுத்திய உயிர்த்தெழுந்த ஆண்டவர், ஆவிக்குரிய ஜீவிகள் குறித்து வெளிப்படுத்தியது என்ன? **A P. 226 ¶ 3; A P. 227 ¶ 1**

(27) What is, therefore, the conclusion respecting the separateness of the human and spirit natures? And what is the purpose of God in permitting a change from one nature to another in special cases? Page 184 ¶ 2
27. மனித சுபாவமும் ஆவிக்குரிய சுபாவமும் வேறானதைத் தொடர்புடைய முடிவுரை என்ன? மேலும், விசேஷித்த தருணங்களில் ஒரு சுபாவத்திலிருந்து மற்றொரு சுபாவத்திற்கான ஒரு மாறுதலை அனுமதிப்பதில் தேவனுடைய நோக்கம் என்னவாக இருக்கிறது? **A P. 227 ¶ 2**

(28) What is the significance of the word, "Mortality"? Page 184 ¶ 3; page 185 ¶ 1
28. **"அழிவுக்குரிய"** என்ற வார்த்தையின் உட்பொருள் என்ன? **A P. 228** ¶ **1, 2**

(29) What does "Immortality" signify? Page 185 ¶ 2
29. **"அழியாமை"** அர்த்தப்படுத்துவது என்ன? **A P. 228** ¶ **3**

(30) What is the popular but erroneous idea about mortality and immortality? Page 185 ¶ 3
30. **அழிவுக்குரிய** மற்றும் **அழியாமைக்குரிய** நிலைமையக் குறித்த பிரபலமான ஆனால் தவறான கருத்து என்ன? **A P. 228** ¶ **4**

(31) What is the meaning of the word immortal? And was Adam mortal or immortal before he sinned? Page 185 ¶ 4, 5
31. **அழியாமை** என்ற வார்த்தைக்கான அர்த்தம் என்ன? மேலும், ஆதாம் பாவம் செய்வதற்கு முன்பு அழிவுக்குரிய சுபாவத்திலா அல்லது அழியாமைக்குரிய சுபாவத்தில் இருந்தாரா? **A P. 256** ¶ **1** (17-21 வரிகள்)**; A P. 228** ¶ **5; A P. 229** ¶ **1**

(32) If Adam was mortal, was he on trial for immortality? Page 186 ¶ 1
32. ஆதாம் **அழிவுக்குரிய** நிலையில் இருந்தாரானால், அவர் **அழியாமை** நிலைக்குரிய பரீட்சையில் இருந்தாரா? **A P. 229** ¶ **2**

(33) Is there any Scriptural authority for the theory that angels are immortal, or that restored humanity will be immortal? Page 186 ¶ 2; page 187 ¶ 1
33. தூதர்கள் **அழியாமைக்குரிய** நிலைமையில் உள்ளார்கள் என்றோ அல்லது மீட்கப்படும் மனுக்குலத்தார் **அழியாமைக்குரிய** நிலையை அடைவார்கள் என்றோ சொல்லக்கூடிய கொள்கைக்கான வேதவாக்கியங்களின் அடிப்படையிலான ஆதாரம் ஏதாகிலும் உள்ளதா? **A P. 230** ¶ **1; A P. 231** ¶ **1**

(34) When the incorrigible have been destroyed, what will be the everlasting experience of both mortal and immortal beings, respectively? Page 187 ¶ 2
34. திருத்தமுடியாத பாவிகள் அழிக்கப்பட்டிருக்கும்போது, அழிவுக்குரிய மற்றும் அழியாமைக்குரிய ஜீவிகளைப் பொறுத்தவரையில், நித்தியத்திற்குமான அனுபவமாக இருக்கப்போவது என்ன? **A P. 231** ¶ **2**

(35) What is the foundation of the unscriptural doctrine of eternal torment, and how does a proper understanding of the terms mortal and immortal destroy this foundation? Page 187 ¶ 3
35. நித்திய சித்தரவதைக்குரிய வேதவாக்கியங்கள் அங்கீகரிக்காத போதனையின் அஸ்திபாரம் என்ன? மேலும், **அழிவுக்குரிய** மற்றும் **அழியாமைக்குரிய** நிலைமை என்ற வார்த்தைகளின் மீதான சரியான புரிந்துகொள்ளுதல் எவ்வாறு இந்த அஸ்திபாரத்தை அழித்துப்போட்டது? **A P. 231** ¶ **3**

(36) What is the mistaken idea of some regarding the requirements of God's justice in making a difference in the bestowing of His favors among His creatures? Page 187 ¶ 4
36. தேவன் தம்முடைய சிருஷ்டிகளுக்கு, தயை அளிப்பதில் காண்பிக்கக்கூடிய வித்தியாசத்தில், தேவனுடைய நீதி எப்படியாகக் காணப்படும் என்று சிலர் கொண்டிருக்கும் தவறான கருத்துக்கள் என்ன? **A P. 232** ¶ **1**

(37) If this suggestion were correct, how should we expect this law of progression to operate throughout the universe? Page 188 ¶ 1
37. இந்த கருத்து சரியாக இருக்குமேயானால், மேம்பாடு தொடர்புடைய இந்த கொள்கை அண்டசராசரம் எங்கும் கிரியை செய்ய நாம் எவ்வாறு எதிர்பார்க்க வேண்டும்? **A P. 232** ¶ **2**

(38) How would the carrying out of this principle affect the pleasing variety and beauty of God's handiwork? Page 188 ¶ 2
38. இந்தக் கொள்கையை நடைமுறைப்படுத்தும்பொழுது, அழகானதும், பல்வேறு வகையானதுமான, தேவனுடைய கைவேலைபாட்டினை எவ்வாறு பாதிக்கச் செய்யும்? **A P. 233** ¶ **1**

(39) Should a favor ever be considered as a justly merited reward? And does a simple act of justice call for special gratitude, or is it any proof of love? Page 188 ¶ 3
39. (தேவன் கொடுக்கக்கூடிய) ஒரு **தயவை** நியாயமாகக் கிடைக்க வேண்டிய **பலன்** என்று எண்ணப்படலாமா? மேலும், **நீதியினால்** ஏவப்பட்டு செய்த செயலுக்கு விசேஷ விதமான **நன்றியை** செலுத்த வேண்டியது அவசியமா, அல்லது அவ்வாறு செய்வது அன்பைக் காட்டுவதற்கான அடையாளமா? **A P. 233** ¶ **2**

(40) What were Jehovah's sovereign rights with respect to man's creation and continued existence? What attitude is becoming to all God's intelligent creatures? Page 189 ¶ 1
40. மனிதனுடைய சிருஷ்டிப்பு மற்றும் அதைத் தொடர்ந்து ஜீவியம் குறித்து தேவனுடைய ஒப்புயர்வற்ற உரிமைகள் என்னவாக இருந்தது? தேவனுடைய அறிவுள்ள சிருஷ்டிகள் **அனைவருக்கும்** எப்படிப்பட்ட மனநிலை உருவாகின்றது? **A P. 234** ¶ **1**

(41) What lesson should both men and angels learn from Satan's ambition and fall? Page 189 ¶ 2
41. சாத்தானுடைய குறிக்கோள் மற்றும் வீழ்ச்சியிலிருந்து, மனுஷர்கள் தூதர்கள் ஆகிய இருவரும் கற்றுக்கொள்ள வேண்டிய படிப்பினை என்ன? **A P. 234** ¶ **2**

(42) Are the principles upon which God's election is based, conditional or unconditional? Page 189 ¶ 3
42. தேவனுடைய **தேர்ந்தெடுத்தலை** அடிப்படையாகக் கொண்டுள்ள கொள்கைகள், **நிபந்தனைக்குட்பட்டதா** அல்லது **நிபந்தனையற்றதா**? **A P. 235** ¶ **1**

(43) Was it because the chosen ones were better than others of mankind, that God invited them to be partakers of the divine nature? Who is he that dares to question the divine right to do according to His good pleasure? Page 190 ¶ 1
43. தெரிந்துகொள்ளப்பட்டவர்கள், மனுக்குலத்தின் மற்றவர்களைப்பார்க்கிலும் சிறந்தவர்கள் என்ற காரணத்தினால், திவ்ய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாகும்படி தேவன் அவர்களை அழைத்தாரா? தேவன் தம்முடைய திரு உள்ளத்தின்படி செய்வதற்குரிய தெய்வீக உரிமையைக் கேள்வி கேட்க துணியத்தக்கவன் யார்? **A P. 235** ¶ **2**

(44) What is the proper attitude of man toward his Creator?--to ask or to dictate? Page 190 ¶ 2
44. சிருஷ்டிகர்பால் மனிதன் கொண்டிருக்க வேண்டிய சரியான மனநிலை என்ன - கேள்வி கேட்பதா (அ) கட்டளையிடுவதா? **A P. 236** ¶ **1**

(45) What does St. Paul declare concerning the nature of the first man. and of his posterity, in the resurrection? What is the only exception to this rule? What do the Lord, St. Peter and all the holy prophets declare respecting the restoration of the human race? Page 191 ¶ 1
45. உயிர்த்தெழுதலில், முதல் மனிதன் மற்றும் அவருடைய சந்ததியினரின் சுபாவம் குறித்து அப்போஸ்தலர் பவுல் தெரிவிப்பது என்ன? இந்தக் கோட்பாட்டிற்கு ஒரே விதிவிலக்காக இருப்பது என்ன? மனுக்குலத்தின் திரும்பக்கொடுத்தல் தொடர்பாக கர்த்தரும், பரிசுத்த வானாகிய பேதுருவும், பரிசுத்த தீர்க்கதரிசிகள் அனைவரும் தெரிவிப்பது என்ன? **A P. 237** ¶ **1**

(46) Picture the glorious portion which God has promised to all the obedient of mankind in the "Ages to come." Page 191 ¶ 2
46. "வரவிருக்கும் யுகங்களில்," கீழ்ப்படிதலுள்ள மனுக்குலம் அனைவருக்கும் தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கும் மகிமையான பங்கை சித்தரிக்கவும். **A P. 237** ¶ **2**

(47) Describe the changes which the earth itself will undergo in order to become the fit abode for the restored human race. Will man be dissatisfied with his position on the human plane, and prefer the spirit conditions? Page 192 ¶ 1
47. திரும்ப சீர்பொருத்தப்பட்ட மனுக்குல சந்ததியினருக்கான தகுதியான இடமாக மாற்றப்படும் பொருட்டு இந்த பூமி தாமே எப்படிப்பட்ட மாற்றத்திற்குள் கடந்துசெல்லும் என்பதை விவரித்துக்

கூறவும். மனுஷனானவன் மாம்சீக தளத்தில் உள்ள தன்னுடைய ஸ்தானத்தைக் குறித்து அதிருப்தியுள்ளவனாகி, ஆவிக்குரிய நிலையை விரும்புகிறவனாக இருப்பானா? **A P. 238** ¶ **1**

(48) At what time in the Divine Plan did Jehovah purpose the selection of the church class? Page 193 ¶ 1
48. தெய்வீக திட்டத்தில், தேவன் சபை வகுப்பாரின் தெரிந்தெடுத்தலை எப்பொழுது திட்டம் பண்ணினார்? **A P. 239** ¶ **1**

(49) Do the Scriptures teach an individual, unconditional election? If not, explain the Bible presentation of election and predestination. Page 193 ¶ 2
49. வேதவாக்கியங்கள், நிபந்தனையற்ற தனிநபரின் தெரிந்தெடுத்தலை போதக்கின்றதா? இல்லையெனில், வேதம் தெரிவிக்கக்கூடிய தெரிந்தெடுத்தல் மற்றும் முன்குறித்தல் பற்றி விளக்கவும். **A P. 240** ¶ **1**

(50) What is the proper significance of the word "glorified" in Romans 8:30? How does it apply to Jesus and His church? Page 194 ¶ 1
50. ரோமர் 8:30-ஆம் வசனத்தில் "மகிமைப்படுத்தப்பட்டவர்கள்" என்று கூறப்பட்டுள்ள வார்த்தையின் சரியான அர்த்தம் என்ன? இது இயேசுவுக்கும் அவருடைய சபைக்கும் எவ்வாறு பொருந்துகிறது? **A P. 240** ¶ **2**

(51) In selecting the church are all mankind called? Page 195 ¶ 1
51. சபையைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில், மனுக்குலம் **அனைவரும்** அழைக்கப்படுகின்றார்களா? **A P. 241** ¶ **1**

(52) In what respect is the selection of the church conditional? Page 195 ¶ 2
52. எவ்விதத்தில் சபையின் தேர்வு **நிபந்தனைக்குட்பட்டதாக** இருக்கிறது? **A P. 242** ¶ **1**

(53) What principle characterizes God's disposition of His favors? Page 195 ¶ 3
53. தேவனுடைய தயவுகளை வருணிக்கும் **கொள்கை** எது? **A P. 242** ¶ **2**

(54) What are the conditions upon which the church may become partakers of the divine nature? Page 195 ¶ 4; page 196 ¶ 1
54. சபை எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் திவ்ய சுபாவத்திற்குப் பங்குள்ளவர்களாவர்கள்? **A P. 243** ¶ **1, 2**

(55) To what is the beginning and development of the new nature likened? Page 196 ¶ 2
55. புதிய சுபாவத்தின் ஆரம்பமும் வளர்ச்சியும் எதற்கு ஒப்பிடப்படுகின்றது? **A P. 243** ¶ **3; A P. 244** ¶ **1**

(56) Explain the experiences of the old and new creatures, respectively, during the process of development of the new creature. Page 197 ¶ 1
56. புது சிருஷ்டி வளர்ச்சி நிலையில் இருக்கும் தருவாயில், குறிப்பாக பழைய மற்றும் புது சிருஷ்டிகளுக்கு ஏற்படும் அனுபவங்கள் குறித்து விளக்கிக் கூறவும். **A P. 244** ¶ **2**

(57) When does the birth of the new creature take place? Page 197 ¶ 2
57. புது சிருஷ்டியின் பிறத்தல் எப்பொழுது நடைபெறும்? **A P. 245** ¶ **1**

(58) What must naturally precede the spirit-birth? Page 197 ¶ 3
58. ஆவியில் பிறத்தலுக்கு முன் இயற்கையாக சம்பவிக்க வேண்டியது என்ன? **A P. 245** ¶ **2**

(59) Is the transforming of the mind an instantaneous or a gradual work? Page 198 ¶ 1
59. சிந்தை மறுரூபமாக்கப்படுவது என்பது உடனடியாக நடக்கக்கூடிய காரியமா அல்லது படிப்படியாக நடக்கக்கூடிய காரியமா? **A P. 245** ¶ **3**
(60) To what class are the words of the apostle in Romans 12:1 addressed? Page 198 ¶ 2

60. ரோமர் 12:1-ஆம் வசனத்தில் சொல்லப்பட்டுள்ள அப்போஸ்தலரின் வார்த்தைகள் எவ்வகுப்பாருக்கு எழுதப்பட்டுள்ளது? **A P. 246 ¶ 1**

(61) Explain the difference between transformation of character and transformation of nature. Page 198 ¶ 3
61. **குணநலன்களில்** மாற்றமடைவதற்கும், **சுபாவத்தில்** மாற்றமடைவதற்கும் இடையே காணப்படும் வேறுபாட்டை விளக்கிக்கூறவும். **A P. 246 ¶ 2**

(62) Describe the difference between "new creatures" and justified "brethren," as to their hopes, desires and aims. Page 199 ¶ 1
62. "புது சிருஷ்டிகளின்" நம்பிக்கைகள், விருப்பங்கள் மற்றும் குறிக்கோள்களுக்கும், நீதிமானாக்கப்பட்ட "சகோதர சகோதரிகளின்" நம்பிக்கைகள், விருப்பங்கள் மற்றும் குறிக்கோள்களுக்கும் இடையே உள்ள வேறுபாட்டை விவரித்துக் கூறவும். **A P. 247 ¶ 1**

(63) Will the change from human to spirit bodies be gradual or instantaneous? Page 200 ¶ 1
63. மாம்சத்திலிருந்து ஆவிக்குரிய **சரீரங்களுக்கு** மாற்றமடைவது, படிப்படியாக நடக்கக்கூடியதா அல்லது உடனடியாக நடக்கக்கூடியதா? **A P. 249 ¶ 1**

(64) In what respects is the human nature a likeness of the spirit nature? And how does it differ? Page 201 ¶ 1, 2
64. எவ்வகையில் மாம்ச சுபாவம் ஆவிக்குரிய சுபாவத்திற்கு ஒத்திருக்கிறது? மேலும், அது எவ்வாறு வேறுபடுகின்றது? **A P. 249 ¶ 2; A P. 250 ¶ 1**

(65) By keeping what thought clearly in mind can we readily comprehend how the change from human to spirit nature is effected? Page 201 ¶ 3
65. எப்படிப்பட்ட சிந்தையை மனதில் தெளிவாக நிறுத்திக்கொள்ளும்போது, மனித சுபாவத்திலிருந்து ஆவிக்குரிய சுபாவத்திற்கு மாறுதலடைதல் எப்படி நிகழ்கின்றது என்பதை அறிந்துணர முடியும்? **A P. 250 ¶ 2**

(66) Is the transformation of mind from earthly to heavenly a change of brain matter, or of the will? Page 202 ¶ 1
66. பூமிக்குரியவற்றிலிருந்து பரத்துக்குரியவற்றிற்கு மனதளவில் மாற்றம் அடைதல் என்பது மூளையில் ஏற்படும் மாற்றமா (அ) சித்தத்தில் ஏற்படும் மாற்றமா? **A P. 250 ¶ 3**

(67) What illustration assists us to understand how we shall recognize ourselves in our new, spirit bodies? Page 202 ¶ 2 and footnote.
67. நாம் நமது புதிய, ஆவிக்குரிய சரீரங்களில் மாறுதல் அடைந்திருப்பதை நமக்கு நாமே எவ்வாறு உணர்ந்துகொள்ளலாம் என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு உதவிபுரியும் எடுத்துக் காட்டு என்ன? **A P. 251 ¶ 1; அடிக்குறிப்பு.**

(68) Explain the philosophy of Jesus' change from the spirit to the earthly conditions, and His ability to describe His former glory. Page 202 ¶ 3
68. ஆவிக்குரிய நிலையிலிருந்து பூமிக்குரிய நிலைக்கு மாற்றம் அடைந்த இயேசுவைக் குறித்த தத்துவத்தைப் பற்றியும், அவருடைய முந்தின மகிமையை விவரிப்பதற்கு அவரிடத்தில் காணப்பட்ட திறன் பற்றியும் விளக்கிக் கூறவும். **A P. 251 ¶ 2**

(69) Is the transforming of the mind an active or a passive process? Page 203 ¶ 1
69. சிந்தை மறுரூபமாகுதல் என்பது நாமே செய்கிற விஷயமா (அ) நடைபெறும்படிக்கு நம்மை ஒப்புக்கொடுக்கிற விஷயமா? **A P. 252 ¶ 1**

(70) Are the promises to the church earthly or heavenly, and to what age is the heavenly calling confined? When did the earthly calling begin, and when will it end? Page 203 ¶ 2

70. சபைக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்கள் பூமிக்குரியதா (அ) பரத்துக்குரியதா? மேலும், எந்த யுகத்திற்கு பரலோக அழைப்பு வரையறுக்கப்பட்டுள்ளது? பூமிக்குரிய அழைப்பு எப்பொழுது ஆரம்பமாயிற்று மற்றும் அது எப்பொழுது முடிவடையும்? **A P. 253** ¶ **1**

# வேத ஆராய்ச்சி
# தொகை நூல் I மீதான
# பெரோயரின் கேள்விகள்

## அத்தியாயம் 11

### *"மூன்று வழிகள் - விசாலமான வழி, குறுகலான வழி, பெரும்பாதையான வழி"*

(1) What Scriptures bring to our attention the "three ways," and how are they designated? Page 205 ¶ 1 to 3.
(1) "மூன்று வழிகள்" நம் கவனத்திற்குக் கொண்டுவரக்கூடிய வேதவாக்கியங்கள் என்ன? மேலும், அவை எவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது? **A P. 255 ¶ 1, 2, 3**

(2) Why is the broad road so named? Page 205 ¶ 4
(2) விசாலமான வழியானது, அவ்வாறு பெயரிடப்பட்டிருப்பது ஏன்? **A P. 255 ¶ 4**

(3) How long has the race traveled this "broad way," and have none ever tried to retrace their steps? When and how was the only way of escape brought to light? Page 206 ¶ 1
(3) இந்த "விசாலமான வழியில்" மனுக்குல சந்ததியினர் எவ்வளவு காலம் பிரயாணித்து வருகின்றனர் மற்றும் அவர்களில் ஒருவரும் ஒருபோதும் தங்கள் வழிகளை மாற்றிக்கொள்ள முயற்சிக்கவில்லையா? தப்பிப்பதற்கான ஒரே மார்க்கம் எப்பொழுது மற்றும் எப்படி வெளிச்சத்திற்குக் கொண்டுவரப்பட்டது? **A P. 256 ¶ 1**

(4) What is the new way to life opened up for the Royal Priesthood? Page 206 ¶ 2
(4) இராஜரீக ஆசாரியக்கூட்டத்தாருக்காக திறந்துவைக்கப்பட்ட ஜீவனுக்கேதுவான புதிய வழி என்ன? **A P. 257 ¶ 1**

(5) Why is it that after having heard of the new way, so few are willing to walk therein? Page 207 ¶ 1
(5) புதிய வழியைக் குறித்து கேள்விப்பட்டப் பிற்பாடும்கூட வெகு சிலரே அவ்வழியில் நடக்கப் பிரியப்படுவது ஏன்? **A P. 257 ¶ 2**

(6) What is the end to which this narrow way leads? And what is this "highest form of life"? Page 207 ¶ 2
(6) குறுகலான வழி எப்படிப்பட்ட முடிவுக்கு வழிநடத்திச் செல்கிறது? மேலும், "உயர்ந்தபட்ச ஜீவன்" எது? **A P. 258 ¶ 1**

(7) How shall we define life? What is the difference between the operation of the principle of life in Jehovah and in mankind? Page 207 ¶ 3
(7) ஜீவன் என்ற வார்த்தையை நாம் எவ்வாறு விளக்கலாம்? பிதாவாகிய தேவனுக்குள் காணப்படும் ஜீவிக்கும் கொள்கையின் செயல்பாட்டிற்கும், மனுக்குலத்திற்குள் காணப்படும் ஜீவிக்கும் கொள்கையின் செயல்பாட்டிற்கும் இடையே உள்ள வேறுபாடு என்ன? **A P. 258 ¶ 2**

(8) What are the characteristic conditions of the divine nature with respect to life? Page 208 ¶ 1
(8) ஜீவனைப் பொறுத்தவரையில் தெய்வீக சுபாவத்தின் குறிப்பிடத்தக்க நிபந்தனைகள் என்ன? **A P. 259 ¶ 1**

(9) Using the illustrations of light reflected from a diamond and from a brick, and the measure of life in the lower animals, show why Adam was grander in his perfection than any other creature. Page 208 ¶ 2, 3
(9) ஒரு வைரத்திலிருந்தும், ஒரு செங்கல்லிலிருந்தும் பிரதிபலிக்கக்கூடிய வெளிச்சத்தின் எடுத்துக்காட்டுகளையும், தாழ்வான மிருகங்களில் காணப்படும் ஜீவ நிலையைப் பயன்படுத்தி, ஆதாம் வேறெந்த சிருஷ்டியைப் பார்க்கிலும் பரிபூரணத்தில் மகிமை நிறைந்தவராக இருந்தது ஏன் என்பதைக் காண்பிக்கவும். **A P. 259 ¶ 2; A P. 260 ¶ 1**

(10) How did the conditions in Eden show man's dependence upon a continued supply of life? And what was the natural result when Adam was separated from the "trees of life"? Page 209 ¶ 1, 2
(10) தொடர்ந்து ஜீவிப்பதற்காக ஒன்றன் மீது மனிதன் சார்ந்திருப்பதை **ஏதேனின்** சூழ்நிலைகள் எவ்வாறு காண்பிக்கிறது? மேலும், "ஜீவ விருட்சங்களிலிருந்து" ஆதாம் பிரிக்கப்பட்டபோது, இயற்கையாக சம்பவித்த முடிவு என்ன? **A P. 260 ¶ 2; A P. 261 ¶ 1**

(11) What is the reward promised to those who pursue the "narrow way" to the end? And who alone originally possessed immortality? Page 210 ¶ 1, 2
(11) முடிவுபரியந்தம் "குறுகலான வழியில்" தொடர்ந்து செல்லக்கூடியவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசு என்ன? மேலும், யார் மாத்திரமே முதலில் சாவாமையைப் பெற்றிருந்தார்? **A P. 262 ¶ 1, 2**

(12) What Scriptures teach that the Son of God possesses immortality since His resurrection? And to whom has this great honor been subsequently extended? Page 211 ¶ 1, 2
(12) தேவனுடைய குமாரனானவர் தம்முடைய உயிர்த்தெழுதல் முதற்கொண்டு அழியாமையை பெற்றிருக்கிறார் என்று போதிக்கக்கூடிய வேதவாக்கியங்கள் என்ன? **A P. 262 ¶ 3; A P. 263 ¶ 1**

(13) While the High Calling is confined exclusively to the Gospel age, is there any other offer during this age? Page 211 ¶ 3
(13) பரம அழைப்பு என்பது சுவிசேஷ யுகத்திற்காக விசேஷமாக உரியதான இருக்கையில், இந்த யுகத்தில் வேறே ஏதேனும் அழைப்பு உள்ளதா? **A P. 263 ¶ 2**

(14) What other name might be applied to the narrow way? And what is the difference between dying with Adam and dying with Christ? Page 212 ¶ 1
(14) குறுகலான இந்த வழிக்கு வேறு எந்த பெயர் பொருந்தக்கூடும்? மேலும், **ஆதாமோடுகூட** மரிப்பதற்கும், **கிறிஸ்துவோடுகூட** மரிப்பதற்கும் இடையே காணப்படும் வேறுபாடு என்ன? **A P. 264 ¶ 1**

(15) When will the "narrow way" to immortality come to an end? And when will death be abolished? Page 212 ¶ 2
